பொறியியல் கலந்தாய்வில் பங்கேற்க வழிகாட்டும் விதமாக

திண்டுக்கல்லில் கல்வி சேவை மையங்கள் துவக்கம்

திண்டுக்கல், மே 7: திண்டுக்கல் மாவட்டத்தில் மூன்று இடங்களில் அண்ணா பல்கலை தொழில்நுட்ப இளங்கலை, முதுகலை கல்வி சேர்க்கைக்கான சேவை மையங்கள் துவங்கப்பட்டு உள்ளன.

தமிழகத்தில் பிளஸ் டூ முடிவுகள் இன்னும் சில நாட்களில் வெளியிடப்பட உள்ளது. இந்நிலையில் 2026 – 2027 கல்வி ஆண்டுக்கான அண்ணா பல்கலை இளங்கலை, முதுகலை பொறியியல் படிப்புக்களுக்கான சேர்க்கைக்கான கலந்தாய்வுக்கான தேதி அறிவிக்கபடாமல், விண்ணப்பங்களை பதிவேற்றம் செய்ய மே.3ல் அறிவிப்பு வெளியிடப்பட்டது. அன்றைய தினத்தில் இருந்து விண்ணப்பங்கள் நிரப்பி, சான்றிதழ்களை பதிவேற்றம் செய்யலாம் என அறிவித்தது.

மாநிலம் முழுவதும் மாணவர்களுக்கு உதவ சேவை மையங்களை அண்ணா பல்கலை துவக்கி உள்ளது.

மேலும், ஆன்லைன் விண்ணப்பங்கள் பதிவு செய்வதற்கு ஜூன் 2 இறுதி நாள் ஆகும், சான்றிதழ்களை பதிவேற்றம் செய்ய இறுதி நாள் ஜூன் 6 ம் தேதியும், கலந்தாய்வுக்கான சுழற்சி முறை ரேண்டம் எண் ஒதுக்கீடு செய்வதற்கான தேதி ஜூன் 5 தேதியும், சான்றிதழ் ஆன்லைனில் ஆய்வு செய்வதற்கு ஜூன் 8 முதல் ஜூன் 20ம் தேதி வரை கால அவகாசம் அளிக்கப்பட்டு உள்ளது. ஜூன் 29ல் விண்ணப்பதாரர்களின் தரப்பட்டியல் வெளியிட உள்ளனர்.

அதன் பின் ஜூன் 30 முதல் ஜூலை 4 வரை விண்ணப்பதாரர்களுக்கான குறைதீர் முகாம் நடத்தப்பட உள்ளது. பின் கலந்தாய்வு நடக்க உள்ளது. கலந்தாய்வு நடக்கும் தேதிகளை மட்டும் பல்கலை நிர்வாகம் அறிவிக்காமல் உள்ளது. இந்நிலையில் மாவட்டத்தில் திண்டுக்கல் எம்.வி.எம் அரசு மகளிர் கலை அறிவியல் கல்லூரி, பழனி அருள்மிகு பழநியாண்டவர் பாலிடெக்னிக் கல்லூரி, பழநி ரோட்டில் உள்ள அண்ணா பல்கலை வளாகம் என மூன்று சேவை மையங்களை அண்ணா பல்கலை நிர்வாகம் துவக்கி உள்ளது. திண்டுக்கல் மாணவர்கள் எம்.வி.எம்., கலை அறிவியல் கல்லூரியில் அமைக்கப்பட்டு உள்ள சேவை மையத்தில் காலை 9:00 முதல் மாலை 5:00 மணி வரை விண்ணப்பங்கள் மற்றும் சான்றிதழ்களை பதிவேற்றலாம்.

மேலும் சந்தேகங்களை நேரடியாக தெரிந்து கொள்ளலாம். இதுகுறித்து எம்.வி.எம்., கல்லூரி முதல்வர் லட்சுமி தெரிவித்ததாவது: கல்லூரியில் உள்ள சேவை மையத்தில் ஒருங்கிணைப்பாளராக இணைப் பேராசிரியர் கிருஷ்ணவேணி, விரிவுரையாளர் ஆதிசக்தி பணி அமர்த்தப்பட்டு உள்ளனர். பொறியியல் கல்வி பயில திண்டுக்கல் மாவட்ட கிராமப் பகுதி மாணவர்கள் ஆர்வமுடன் இருப்பர். ஆனால் வழிமுறைகள் தெரியாது. அவர்களுக்கு வழிகாட்டவே எங்கள் கல்லூரியில் கலந்தாய்வுக்கு செல்லும் மாணவர்கள் சிரமங்களை தவிர்க்க சேவை மையத்தை அண்ணா பல்கலை அமைத்துள்ளது என தெரிவித்தார்.

டூவீலர் விபத்தில் 2 பேர் பலி

நத்தம், மே 7: நத்தம் அருகே இடையபட்டி பிரிவில் மாயன் (60) என்பவர் சாலை ஓரமாக நடந்து சென்று கொண்டிருந்தார். அப்போது நத்தம்– கோவில்பட்டியைச் சேர்ந்த கண்ணன் என்பவர் ஒட்டி வந்த டூவீலர் அவர் மீது மோதியதில் தூக்கி வீசப்பட்ட மாயன் பலத்த காயமடைந்தார். உயிருக்கு ஆபத்தான நிலையில் மதுரை அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்தவர், சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். இது குறித்து நத்தம் போலீசார் வழக்குப் பதிவு செய்து விசாரணை செய்து வருகின்றனர்.

மற்றொரு சம்பவம் நத்தம் அருகே முளையூர்-ராவுத்தம் பட்டியைச் சேர்ந்தவர் கிருஷ்ணன் (54). கூலித்தொழிலாளியான இவர் எர்ரமநாயக்கன்பட்டி பகுதியிலிருந்து ஊருக்கு நடந்து சென்று கொண்டிருந்தார்.

அப்போது பின்புறமாக சேந்தமங்கலத்தை சேர்ந்த சேதுராமன் என்பவர் ஓட்டி வந்த டூவீலர் மோதியதில் தூக்கி வீசப்பட்டு பலத்த காயமடைந்த கிருஷ்ணனை அக்கம் பக்கத்தினர் மீட்டு நத்தம் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அனுப்பி வைத்தனர். ஆனால் கிருஷ்ணன் வழியிலேயே உயிரிழந்தார். இது குறித்து நத்தம் போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

புகையிலை விற்ற கடைக்கு சீல்

நத்தம் அசோக் நகரில் புகையிலைபொருட்கள் விற்ற கடைக்கு அதிகாரிகள் சீல் வைத்தனர்.

நத்தம், மே. 7: நத்தம் பகுதியில் புகையிலை பொருட்கள் விற்பனை நடைபெறுவதாக மாவட்ட நிர்வாகத்திற்கு ரகசிய தகவல் வந்ததையடுத்து மாவட்ட கலெக்டர் உத்தரவின் பேரில் மாவட்ட உணவு பாதுகாப்பு நியமன அலுவலர் கலைவாணி ஆலோசனையின் பேரில் நத்தம் உணவு பாதுகாப்பு அலுவலர் ஜாபர் சாதிக் நத்தம் பகுதிகளில் உள்ள கடைகளில் ஆய்வு மேற்கொண்டார். அப்போது அசோக் நகரில் ஜாஹிர் ஹூசைன் என்பவர் தனது கடையில் புகையிலைப் பொருட்கள் பதுக்கி வைத்து விற்பனை செய்வது தெரியவந்ததை தொடர்ந்து அங்கு சென்று சோதனை செய்ததில் 325 கிராம் எடை கொண்ட புகையிலைப் பொருட்களை பறிமுதல் செய்து 2ம் முறை குற்றம் என்பதால் வழக்கு பதிவு செய்து கடைக்கு சீல் வைத்தார்.

கோடை கால பயிற்சி முகாம்

தேனி, மே 7: பெரியகுளம் அருகே லட்சுமிபுரம் அரசு மேல்நிலைப்பள்ளியில் சமூக நலத்துறை சார்பில் பள்ளி மாணவ, மாணவிகளுக்கான கோடை கால பயிற்சி முகாம் துவக்க விழா நேற்று நடந்தது. நிகழ்ச்சிக்கு மாவட்ட கலெக்டர் ரஞ்ஜீத் சிங், தலைமை வகித்து பயிற்சி முகாமினை தொடங்கி வைத்தார்.

இம்முகாமில் ஓவியப்பயிற்சி, சிலம்பம், சதுரங்கம், யோகா மற்றும் இயற்கை மருத்துவம், காளான் வளர்ப்பு, மண்புழு உரம் தயாரித்தல் மற்றும் நாற்றங்கால் வளர்ப்பு முறை ஆகியவைகள் குறித்து பயிற்சிகள் வழங்கப்பட உள்ளது.

இம்முகாம் நேற்று முதல் தொடர்ச்சியாக 20 நாட்கள் நடைபெற உள்ளது. இம்முகாமினை மாணவர்கள் முறையாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என கலெக்டர் அறிவுறுத்தினார். இம்முகாமில் 100க்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் கலந்து கொண்டனர்.

இதில் முதன்மைக் கல்வி அலுவலர் நாகேந்திரன், மாவட்ட சமூக நல அலுவலர் விஷ்ணு பிரியா, மகளிர் அதிகார மைய மாவட்ட ஒருங்கிணைப்பாளர் சாருமதி மற்றும் முகாம் பயிற்சியாளர்கள், பள்ளி மாணவ, மாணவியர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

கோடைகாலத்தில் கண்களை பராமரிக்கும் முறை

கண் டாக்டர் அட்வைஸ்

பழநி, மே 7: கோடைகாலத்தில் கண்களை பராமரிக்கும் முறை குறித்து கண் டாக்டர் ராஜ் கணேஷ் அறிவுரை வழங்கி உள்ளார்.

கோடை வெயில் சுட்டெரித்து வருகிறது. மக்கள் வெப்ப அலை காரணமாக அவதிப்பட்டு வருகின்றனர். அதீத வெப்பத்தின் காரணமாக கண்களை முறையாக பராமரிக்க வேண்டிய சூழ்நிலை உண்டாகி உள்ளது. வெயில் கடுமையாக இருக்கும் நேரங்களில் நேரடியாக சூரிய ஒளி கண்களில் படும்போது பல்வேறு பாதிப்புகள் ஏற்படுகிறது. இதிலிருந்து தப்பிக்கும் முறை பழநியைச் சேர்ந்த பிரபல கண் மருத்துவர் டாக்டர்.ராஜ் கணேஷ் கூறியதாவது,

கண்கள் ஈரப்பதமாக இருப்பதை உறுதி செய்ய வவண்டும். தண்ணீரை அதிகம் குடிப்பதன் மூலம் உடல் மற்றும் கண்கள் ஈரப்பதத்துடன் இருக்க முடியும். ஆல்கஹால் மற்றும் குளிர்பானங்கள் குடிப்பதால் உடலில் பக்க விளைவுகள் ஏற்படும். கம்ப்யூட்டர், செல்போன் போன்ற எலக்ட்ரானிக்ஸ் சாதனங்களை அதிகம் பயன்படுத்துவதை தவிர்க்க வேண்டும். கோடைகால பழங்களான தர்பூசணி, வெள்ளரி, நுங்கு போன்றவற்றை அதிகம் சேர்த்துக் கொள்ள வேண்டும். அதிக வெப்பம் காரணமாக கண்களில் எரிச்சல் மற்றும் வறட்சி தன்மை ஏற்பட வாய்ப்புள்ளது.

அப்போது சுய வைத்தியம் செய்யாமல், கண் மருத்துவரை அணுக வேண்டும். கண்கள் பாதுகாப்பாக இருக்க குளிர் கண்ணாடி அணியலாம். அடிக்கடி குளிர்ந்த நீரால் கண்கள் மற்றும் முகத்தை கழுவ வேண்டும். கோடை காலங்களில் காற்று மாசுப்பாட்டின் காரணமாக கண் கட்டி வரலாம். அப்போது நாமகட்டி, ஐஸ் மற்றும் வெந்நீர் ஒத்தடம் வைப்பது போன்றவை செய்யக்கூடாது. முறையாக சிகிச்சை பெற்றுக் கொள்ள வேண்டும். காலை 11 மணி முதல் பிற்பகல் 3 மணி வரை வெயிலில் வராமல் இருப்பது அவசியம். இவ்வாறு அவர் கூறினார்.

மனநலம் பாதித்த வாலிபர் காப்பகத்தில் ஒப்படைப்பு

சின்னமனூர், மே 7: சின்னமனூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகம் அருகே உள்ள பகுதியில் சுமார் 30 வயது மதிக்கத்தக்க மனநலம் பாதிக்கப்பட்ட வாலிபர் ஒருவர், கவனிப்பாரின்றி அழுக்குத்துணியுடன் கிடந்துள்ளார். அவ்வப்போது பொதுமக்களுக்கு இடையூறு செய்தும், சாலையில் குறுக்கே ஓடியபடியும் வாலிபர் திரிந்துள்ளார். அந்த வாலிபரை மீட்டு, முறையான சிகிச்சையளித்து காப்பகத்தில் ஒப்படைக்க வேண்டுமென மாவட்ட மருத்துவ துறைக்கு சின்னமனூர் பி.டி.ஓ வேண்டுகோள் விடுத்தார்.

அதன்பேரில் சம்பவ இடத்திற்கு நேரில் வந்த சுப்புலாபுரம் அரசு ஆரம்ப சுகாதார நிலைய மருந்தாளுநர் ரஞ்சித்குமார், சின்னமனூர் காவல்துறையினர் உதவியுடன் மனநலம் பாதிக்கப்பட்ட வாலிபரை மீட்டு சுத்தம், அவருக்கு மாற்று உடை அணிவித்தார். பின்னர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையின் கீழ் இயங்கும் என்ஆர்டிஇசிஆர்சி மனநல சிகிச்சை பிரிவில் வாலிபர் அனுமதிக்கப்பட்டார். அங்கு அவருக்கு மனநல சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. பிடிஓ மற்றும் மருந்தாளுநரின் செயலை சமூக ஆர்வலர்கள் வெகுவாக பாராட்டினர்.

சாலையோரங்களில் நிறுத்தப்படும் வாகனங்களால் மக்கள் அவதி

ஆண்டிபட்டி, மே 7: தேனி மாவட்டத்தில் ஆண்டிபட்டி நகர் பகுதி, மாவட்டத்தின் நுழைவு வாயிலில் அமைந்துள்ளது. தினந்தோறும் ஆண்டிபட்டி நெடுஞ்சாலை வழியாக கம்பம், போடி, குமுளி மற்றும் மதுரை, திருநெல்வேலி, ராஜபாளையம், தென்காசி உள்ளிட்ட பகுதிகளில் இருந்து ஏராளமான அரசு மற்றும் தனியார் பேருந்துகள், கனரக வாகனங்கள், கார்கள் உள்ளிட்ட வாகனங்கள் சென்று வருகின்றன. ஆண்டிபட்டி நகரில் தேனி-மதுரை நெடுஞ்சாலையில் பேக்கரிகள், வணிகப் பொருட்கள் விற்பனை செய்யும் கடைகள், அரசு அலுவலகங்கள், வங்கிகள் உள்ளிட்ட பொதுமக்களுக்கு தேவையான பல்வேறு நிறுவனங்கள் மற்றும் கடைகள் அமைந்துள்ளன. இங்கு வாகனங்களில் வருபவர்கள், தங்களது வாகனங்களை தேனி-மதுரை நெடுஞ்சாலை ஓரத்தில் நிறுத்தி விட்டு செல்வதால் போக்குவரத்து பாதிப்பு ஏற்படுகிறது. மேலும் டூவீலர் மற்றும் கார்களை நிறுத்துவதற்கு என்று ஒதுக்கப்பட்ட இடத்தில் நிறுத்தாமல் நெடுஞ்சாலை ஓரத்தில் நிறுத்துவதால் விபத்துகள் ஏற்படும் அபாயமும் ஏற்பட்டுள்ளது.தேனி-மதுரை நெடுஞ்சாலை ஓரத்தில் நிறுத்தப்படும் வாகனங்களால் நடந்து செல்லும் பாதசாரிகள் மிகவும் சிரமத்திற்கு ஆளாகி வருகின்றனர். இதனால் ஆண்டிபட்டி நகரில் தொடர்ந்து காலை மற்றும் மாலை நேரங்களில் போக்குவரத்து பாதிப்பு ஏற்படுகிறது. பள்ளி, கல்லூரி மாணவ, மாணவிகளும் சாலையோரத்தில் நடந்து செல்வதற்கு அச்சப்படுகின்றனர்.

ஆண்டிபட்டி பகுதியில் வார சந்தை நடைபெறுவதால் அப்போது அதிக அளவு கூட்டம் காணப்படும். அந்த நேரத்தில் நெடுஞ்சாலை ஓரத்தில் கார்களை நிறுத்தி வைப்பது, டூவீலர்களின் நிறுத்தி செல்வது உள்ளிட்ட செயல்களால் பொதுமக்கள் கடும் சிரமத்திற்கு ஆளாகின்றனர். எனவே போக்குவரத்து போலீசார், சாலை ஓரங்களில் நிறுத்தப்பட்டிருக்கும் வாகனங்கள் மீது நடவடிக்கை எடுத்து, வாகனங்கள் நிறுத்துவதற்கு என்று ஒதுக்கப்பட்ட இடத்தில் வாகன ஓட்டிகள் வாகனத்தை நிறுத்துவதற்கு ஏற்பாடுகள் செய்ய வேண்டும் என்று பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

சின்ன வெங்காயம் விலை வீழ்ச்சி

வருசநாடு, மே 7: கண்டமனூர், ராமச்சந்திராபுரம், வருசநாடு, சிங்கராஜபுரம், பசுமலைத்தேரி, செங்குளம், தர்மராஜபுரம், வைகைநகர், கும்மன்தொழு உள்ளிட்ட பகுதிகளில் பல ஏக்கர் பரப்பளவில் சின்ன வெங்காயத்தை விவசாயிகள் சாகுபடி செய்து வருகின்றனர். இதன் காரணமாக இப்பகுதியில் சின்ன வெங்காயம் சாகுபடி அதிகரித்துள்ளது.

இதனால் அவற்றின் விலை வீழ்ச்சியடைந்துள்ளது. இதனால் அவற்றை பயிரிட்டுள்ள விவசாயிகள் கவலையடைந்துள்ளனர். இது குறித்து விவசாயிகள் சிலர் கூறுகையில், “இப்பகுதியில் சின்ன வெங்காயம் விளைச்சல் அதிகரித்துள்ளதால், மூன்று கிலோ சின்ன வெங்காயம் ரூ.100க்கு மொத்த வியாபாரிகளால் கொள்முதல் செய்யப்படுகிறது. இதனால் அவற்றை பயிரிட்டுள்ள விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர். பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு உரிய நிவாரணம் வழங்க வேண்டும்” என்றனர்.

வனப்பகுதிகளில் உணவுப் பற்றாக்குறை

தேயிலைத் தோட்டங்களில் தஞ்சமடையும் மயில்கள்

மூணாறு, மே 7: கேரள மாநிலம் மூணாறின் இதமான தட்பவெப்பநிலை பொதுவாக மயில்கள் வாழ்வதற்கு ஏற்ற சூழலாகக் கருதப்படுவதில்லை. இதனால் மூணாறில் மயில் நடமாட்டம் என்பது அரிதான ஒன்றாகவே இருந்து வந்தது. ஆனால், சமீபகாலமாக மூணாறு எஸ்டேட் பகுதிகளில் மயில்களின் வருகை அதிகரித்து வருவது பொதுமக்களையும் சுற்றுலாப் பயணிகளையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியுள்ளது.

சில ஆண்டுகளுக்கு முன்பு மறையூர் பகுதியில் மட்டும் காணப்பட்ட மயில்கள், தற்போது மூணாறின் உட்பகுதிகளான கன்னிமலை, குட்டியார்வாலி, தலையார், காபி ஸ்டோர் மற்றும் பாம்பன் மலை போன்ற தேயிலைத் தோட்டப் பகுதிகளில் பரவலாகக் காணப்படுகின்றன. குறிப்பாக தலையார் மற்றும் பாம்பன் மலைப் பகுதிகளில் 10க்கும் மேற்பட்ட மயில்கள் கூட்டமாக உலவி வருகின்றன. இவை தேயிலைத் தோட்டங்கள் மட்டுமின்றி, தொழிலாளர்கள் வசிக்கும் குடியிருப்புப் பகுதிகளுக்கும் அச்சமின்றி வந்து செல்கின்றன.

வனப்பகுதிகளில் நிலவும் உணவுப் பற்றாக்குறை மற்றும் மாறிவரும் காலநிலை காரணமாக, இந்தப் பழங்களைத் தேடி வந்த மயில்கள், இங்கேயே நிரந்தரமாகத் தஞ்சம் புகுந்து விட்டதாகத் தோட்டத் தொழிலாளர்கள் தெரிவிக்கின்றனர். இப்பகுதிகளில் பகல் நேரங்களில் தேயிலை காடுகளுக்குள் மயில்களின் அகவும் சத்தம் இப்பொழுது வாடிக்கையாகிவிட்டது. பச்சை பசேல் என்ற தேயிலைத் தோட்டங்களுக்கு நடுவே, வண்ணமயமான தோகையுடன் மயில்கள் உலவுவதைக் காணும் சுற்றுலாப் பயணிகள் மிகுந்த உற்சாகமடைந்துள்ளனர். இதனைத் தங்கள் கேமராக்களில் ஆர்வத்துடன் புகைப்படம் எடுத்து மகிழ்கின்றனர்.

மாவட்டத்தில் போட்டியிட்ட அனைத்து தொகுதிகளிலும்

3ம் இடத்துக்கு தள்ளப்பட்ட அதிமுக கூட்டணி

தேனி, மே 7: தேனி மாவட்டத்தில் போடி, ஆண்டிபட்டி, கம்பம், பெரியகுளம் என 4 சட்டமன்ற தொகுதிகள் உள்ளன. நடந்து முடிந்த சட்டமன்ற தேர்தலில் போடியில் திமுக சார்பில் ஓ.பன்னீர் செல்வம், அதிமுக சார்பில் வி.டி.நாராயணசாமி, தவெக சார்பில் பிரகாஷ், நாதக சார்பில் கலையரசு ஆகியோர் போட்டியிட்டனர். ஆண்டிபட்டியில் மகாராஜன்(திமுக), ஏ.லோகிராஜன்(அதிமுக), லெப்ட் பாண்டி(தவெக), கோமதி(நாதக) ஆகியோர் போட்டியிட்டனர். கம்பத்தில் ராமகிருஷ்ணன்(திமுக), எஸ்.டி.கே. ஜக்கையன்(அதிமுக), ஜெகநாத் மிஸ்ரா(தவெக) ஆகியோரும், பெரியகுளம்(தனி) தொகுதியில் திமுககூட்டணியைசேர்ந்த ஆற்றல் அரசு(விசிக), அதிமுக கூட்டணியை சேர்ந்த கதிர்காமு(அமமுக), சபரி(தவெக), விமலா(நாதக) ஆகியோரும் போட்டியிட்டனர்.

இதனைத்தொடர்ந்து கடந்த மே 4ம் தேதி நடந்த வாக்கு எண்ணிக்கையில் திமுக வேட்பாளர் ஓ.பன்னீர்செல்வம் 85,206 வாக்குகளும், அதற்கு அடுத்தபடியாக தவெக வேட்பாளர் பிரகாஷ் 78,401 வாக்குகளும், அதிமுக வேட்பாளர் நாராயணசாமி 41,286 வாக்குகளும், நாதக வேட்பாளர் கலையரசி 11,486 வாக்குகளும் பெற்றனர். இதில் திமுக வேட்பாளர் ஓ.பன்னீர்செல்வம் 6,805 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார்.

ஆண்டிபட்டியில் திமுக வேட்பாளர் மகாராஜன் 74,324 வாக்குகளும், லெப்ட் பாண்டி(தவெக) 64,770 வாக்குகளும், ஏ.லோகிராஜன்(அதிமுக) 63,343 வாக்குகளும், கோமதி(நாதக) 10,345 வாக்குகளும் பெற்றனர். இதில் திமுக வேட்பாளர் மகாராஜன் 9,554 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார்.

கம்பத்தில் தவெக வேட்பாளர் ஜெகநாத் மிஸ்ரா 85,394 வாக்குகளும், கம்பம் ராமகிருஷ்ணன்(திமுக) 84,643 வாக்குகளும், எஸ்டிகேஜக்கையன்(அதிமுக) 27,307 வாக்குகளும், அன்புச்செல்வி(நாதக) 9,390 வாக்குகளும் பெற்றனர். இதில் தவெக வேட்பாளர் ஜெகநாத் மிஸ்ரா 751 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார்.

பெரியகுளம்(தனி) தொகுதியில் தவெக வேட்பாளர் சபரி 85,656 வாக்குகளும், திமுக கூட்டணியை சேர்ந்த ஆற்றல் அரசு(விசிக) 66,335 வாக்குகளும், கதிர்காமு(அமமுக) 44,521 வாக்குகளும், விமலா(நாதக) 9,610 வாக்குகளும் பெற்றனர். இதில் தவெக வேட்பாளர் சபரி 19,321 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார். இதன் மூலம் மாவட்டத்தில் உள்ள 4 தொகுதிகளில் திமுக 2 தொகுதிகளையும், தவெக இரு தொகுதிகளையும் கைப்பற்றியுள்ளன. இதில் போட்டியிட்ட 4 தொகுதிகளிலும் அதிமுக மற்றும் அதன் கூட்டணி கட்சியான அமமுக 3ம் இடத்துக்கு தள்ளப்பட்டது.

GRIHUM HOUSING FINANCE

க்ரிஹம் ஹவுசிங் ஃபைனான்ஸ் லிமிடெட்

பதிவு பெற்ற அலுவலகம்: 6 ஆவது தளம், B பில்டிங், கங்கா ட்ரினோ, லோஹேகான், புனே, மகாராஷ்டிரா-411014. கிளை அலுவலகம் அலகு: எண்.39, சியான் டவர்ஸ், 3வது தளம், காளவாசல் பைபாஸ் சாலை, மதுரை-625016, தமிழ்நாடு.

மின்-ஏலம்- விற்பனை அறிவிப்பு சர்ஃபாசி சட்டத்தின் கீழ் கடனீட்டு அசையா சொத்து விற்பனை

பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 (சட்டம்) மேலும் கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 (விதிகள்) விதி 8 மற்றும் 9 கீழ் அசையா சொத்துகளின் மின்-ஏலம் விற்பனை அறிவிப்பு.

இங்கே உள்ள அறிவிப்பின்மூலம் பொதுமக்களுக்கு பொதுவாகவும், கடன்தாரர்கள்/ உப–கடன்தாரர்கள்/ அடமானதாரர்கள் / ஜாமீன்தாரர்களுக்கு குறிப்பாகவும் தெரிவிக்கப்படுவது என்னவென்றால், கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடனீட்டுச் சொத்துகளானது க்ரிஹம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்டின் (இதற்குப் பிறகு சட்டத்தின்படி கடனீட்டு கடனீந்தோர் என்று குறிப்பிடப்படும்) அதிகாரப்பூர்வ அதிகாரியால், சட்டத்தின் பிரிவு 13 (12) இன் படியும், கடனீட்டு சொத்துகளின் (அமலாக்கம்) சட்டத்தின் பிரிவு 13(2) மற்றும் விதிகள் 8 &9 இன் கீழ் அளிக்கப்பட்ட அதிகாரத்தின்படி சுவாதீனம் செய்யப்பட்டுள்ளது.

கடனீட்டு சொத்துகள் **அவை எங்கே உள்ளதோ, என்ன உள்ளதோ, எப்படி உள்ளதோ, அதே அடிப்படையில் மின்–ஏலம் மூலமாக விற்பனை செய்யப்படும். இதன் மூலம் பொது மக்களுக்குத் தெரிவிக்கப்படுவது என்னவென்றால், மின்– ஏல இயங்குதளத்தில் அதன் இணையதள லிங்க்கில் அதாவது,** https://www.bankeauctions.com **மூலமாக 08.06.2026 தேதியன்று மின்–ஏலம் நடைபெறும்.** விற்பனையின் விரிவான நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகளை தெரிந்து கொள்ள க்ரிஹம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்/ கடனீட்டு கடனீந்தோரின் இணையதளம் அதாவது, **www.grihumhousing.com–** ஐ பார்வையிடவும்.

வ. எண்.	முன்மொழிவு எண். வாடிக்கையாளர் பெயர் (A)	கோரிக்கை அறிவிப்பு தேதி மற்றும் நிலுவைத்தொகை (B)	சுவாதீன தன்மை (C)	சொத்தின் விவரம் (D)	நிர்ணய விலை (E)	முன்வைப்புத் தொகை ((நிர்ணய விலையில் 10%)(F)	முன்வைப்புத் தொகை செலுத்தும் தேதி (G)	ஏல உயர்வுத் தொகை (H)	சொத்தை பார்வையிடும் தேதி மற்றும் நேரம் (I)	ஏலத் தேதி மற்றும் நேரம் (J)	தெரிந்த வில்லங்கங்கள் / நீதிமன்ற வழக்குகள் தெரிந்தது ஏதேனும் (K)
1	கடன் எண். HM0 126H17100335 V சேகர் (கடன்தாரர்) முருகேஸ்வரி (உப கடன்தாரர்)	அறிவிப்பு தேதி: 09.07.2025 மொத்த நிலுவைத்தொகை: 09.07.2025 தேதியின்படி ரூ.8,26,969/- (ரூபாய் எட்டு லட்சத்து இருபத்தாறாயிரத்து தொள்ளாயிரத்து அறுபத்து ஒன்பது மட்டும்) மற்றும் நிலுவைத் தொகையைத் திருப்பிச் செலுத்தும் காலம் வரையிலான ஆண்டு வட்டி 17.35% உட்பட.	கையக	திண்டுக்கல் மாவட்டம், திண்டுக்கல் பதிவு மாவட்டம், எண்.2 இணை சார் பதிவு அலுவலகம், திண்டுக்கல் மேற்கு வட்டம், பள்ளபட்டி கிராமம், அயன் சர்வே எண்.30/1, மனை எண்.3 இல் உள்ள 644 ச.அடி பரப்பளவு உள்ள வீட்டு மனையில் ஆர்சிசி வகை கட்டிடம் உள்ளது. இதன் நான்கெல்லைகள் பின்வருமாறு: வடக்கு: வடக்கு: ராயப்பனுக்குச் சொந்தமான மனை எண்.4; கிழக்கு: 10 அடி அகல தெற்கு வடக்கு சாலை, S.No.30/7, மேற்கு: பாச்சா ராவுத்தர் மில் சுற்றுச் சுவர், தெற்கு: தனரமேஸ்வரிக்குச் சொந்தமான மனை எண்.2; உரிமை ஆவணத்தின்படி இந்த மனையின் அளவீடு மற்றும் பரப்பளவு. அளவீடு: கிழக்கிலிருந்து மேற்காக வடக்கு பக்கம்.27 ½ அடி, தெற்கு பக்கம். 28 ½ அடி, தெற்கு வடக்காக மேற்கு பக்கம். 23 அடி, கிழக்கு பக்கம்.23 அடி. மொத்தம் 644 ச.அடி பரப்பளவு வீட்டு மனையில் ஆர்சிசி கட்டிட வகை கட்டிடம் கட்டப்பட உள்ளது. அதில் அனைத்து பொருத்துதல்களும், இணைப்புகளும், வசதிகளும், பயன்பாட்டு மற்றும் பாதை உரிமைகளும் பொருத்துதல்களும் இணைப்புகளும் உள்ள சொத்து.	Rs. 1103725.00/- (ரூபாய் பதினொரு லட்சத்து மூன்றாயிரத்து எழுநூற்று இருபத்தைந்து மட்டும்)	Rs. 110372.50/- (ரூபாய் ஒரு லட்சத்து பத்தாயிரத்து முந்நூற்று எழுபத்திரண்டு மற்றும் பைசா ஐம்பது மட்டும்)	06-06-2026 Before 5 PM	10,000/-	01-06-2026 (11AM – 4PM)	08-06-2026 (11 AM- 2PM)	எதுவுமில்லை

ஆர்வமுள்ள ஏலதாரர்கள்/கொள்முதலாளர்கள் ஏலப்புள்ளி சமர்ப்பிப்பதற்கு முன்பாக ஏலச்சொத்துகள் தொடர்பான விவரங்கள் மற்றும் கூடுதல் கட்டணங்கள், வில்லங்கங்கள், மூன்றாம் நபர் கோருரிமைகள் போன்ற சொத்து தொடர்பான விவரங்களை தெரிந்து கொள்ள அருகில் உள்ள கடனீட்டு கடனீந்தோர் கிளைக்குச் சென்றோ அல்லது தாங்களாகவே எல்லா அம்சங்களையும் கணக்கில் எடுத்துக் கொண்டு தெரிந்து கொண்டு திருப்தியுற வேண்டும். சொத்து தொடர்பான சொத்து வரி, மின்சாரம்/தண்ணீர் ஆகியவற்றுக்கு செலுத்த வேண்டிய கட்டணங்கள் மற்றும் பிற கட்டணங்கள் உள்பட எந்தவிதமான செலவுகளையும் வெற்றிகரமான ஏலதாரரே ஏற்க வேண்டும்.

ஆர்வமுள்ள ஏலதாரர்கள் மின்–ஏலத்துக்கு தேவையான பயனாளர் அடையாள முகவரி, கடவுச் சொல் ஆகியவற்றை சேவை வழங்குநரிடம் C1 இந்தியா பிரைவேட் லிமிடெட், முகவரி: மனை எண்.68, 3 ஆவது தளம், கூர்கயான், ஹரியானா–122003, உதவி எண்: 7291981124,25,26 உதவும் மின்னஞ்சல் முகவரி: Support@bankeauctions.com மூலமாகவோ, தொடர்பு நபர்: தாரணி P, மின்னஞ்சல் முகவரி: dharani.p@c1india.com, தொடர்பு எண்.9948182222 மூலமாகவோ தொடர்பு கொண்டு அவர்களிடம் இருந்து பெற்றுக் கொள்ள வேண்டும். அதன் பிறகு ஆர்வமுள்ள கொள்முதலாளர்/ஏலதாரர்கள் கீழ்வரும் ஆவணங்களை சுயசான்றளிக்கப்பட்ட போன்றவற்றை மின்னஞ்சல் மூலமாகப் பதிவேற்றம் செய்ய வேண்டும். மின்–ஏலம் செயல்பாடு மீதான ஆன்லைன் பயிற்சியை அவர்களிடம் இருந்தே பெற வேண்டும். ஆர்வமுள்ள கொள்முதலாளர்/ ஏலதாரர்கள் அவர்களுடைய ஏல முன்வைப்புத் தொகையை (EMD) NEFT/RTGS/DD மூலமாக **க்ரிஹம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் ஆக்சன் புரஸீட்ஸ் A/C, ICICI BANK LTD,** கணக்கு எண்.091551000028 மற்றும் IFSC Code– ICIC0000915, ஐசிஐசிஐ பேங்க் லிமிடெட், பான்ஞ்ச்சில் டெக்னிகல் பார்க், கணபதி சௌக் அருகில், 43/44, விமன் நகர்–411014 என்ற கிளையில் செலுத்தத்தக்கவிதமாக ஏதேனும் தேசிய வங்கியிலோ அல்லது செட்யூல்டு வங்கியிலோ **06.06.2026** தேதி அன்றோ அதற்கு முன்னதாகவோ செலுத்த வேண்டும். மேலும் https://www.bankeauctions.com இணையதளம் வழியே தங்கள் லாக்இன் அடையாள முகவரி மற்றும் கடவுச்சொல் மூலம் இல் பெயரை முன்னதாகவே பதிவு செய்து கட்டணமில்லா மின்–ஏல பயிற்சி பெற பயனாளர் அடையாள முகவரி, கடவுச் சொல் ஆகியவற்றை சேவை வழங்குநரிடம் இருந்து பெற்றுக் கொள்ள வேண்டும். அதன் பிறகு ஆர்வமுள்ள கொள்முதலாளர்/ஏலதாரர்கள் கீழ்வரும் ஆவணங்களை சுயசான்றளிக்கப்பட்ட போன்றவற்றை மின்னஞ்சல் மூலமாகப் பதிவேற்றம் செய்ய வேண்டும். அவற்றின் மூல பிரதியை அவற்றின் மூல பிரதியை **முகவரி: எண்.39, சியான் டவர்ஸ், 3 வது தளம், காளவாசல் பைபாஸ் சாலை, மதுரை–625016, தமிழ்நாடு, மேலும் கைபேசி எண். +91 9597907666, மின்னஞ்சல் முகவரி** baskaran.soudararajan@grihumhousing.com. தொடர்பு கொள்ள வேண்டும். மின்–ஏலத்தில் பங்கேற்பதற்கான விரிவான நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகளை தெரிந்து கொள்ள https://www.bankeauctions.com & www.grihumhousing.com– ஐ பார்வையிடவும்.

கடனீட்டு சொத்துகளின் (அமலாக்கம்) சட்டம்-2002 இன் விதி 8(6) இன் கீழ் கடன்தாரர்/ உப - கடன்தாரர் / அடமானதாரர்கள்/ ஜாமீன்தாரர்களுக்கு வழங்கப்படும் இந்த அறிவிப்பானது 30 நாள்கள் (முப்பது) அறிவிப்பு என்று கருதத்தக்கதாகும்.

உள்ளூர் மொழி வெளியீட்டில் அல்லது ஆங்கில செய்தித்தாள் வெளியீட்டில் உள்ளடக்கங்களில் ஏதேனும் வித்தியாசம் இருந்தால் பிசினஸ் ஸ்டாண்டர்டு ஆங்கில செய்திதாளில் வெளியிடப்பட்ட உள்ளடக்கமே ஏற்றுக் கொள்ளக் கூடியதாகும்.

நாள்: 07.05.2026, இடம்: தமிழ்நாடு — ஒம்/- அதிகாரப்பூர்வ அலுவலர், க்ரிஹம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்

விற்பனை மற்றும் புதிய சந்தா தொடர்பான விவரங்களுக்கு... தினகரன் 8904156777 9.30 AM - 6.00 PM

C M Y K